# கவிஞர் யுகபாரதியின் பன்முக சிந்தனைகள்

**டீ. சொர்ண ஜெயா**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வு மாணவி
தமிழ்த்துறை, பதிவு எண்.19121204022015
தமிழ் ஆய்வு மையம்
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்
(திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது)

**முனைவர். சு.அந்தோணி செல்வ குமார்**
துறைத் தலைவர், தமிழ்த்துறை
நாசரேத் மர்காஷிஸ் கல்லூரி, பிள்ளையன்மனை
(திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது)

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: செப்டம்பர்**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-5775

**ஆய்வுச் சுருக்கம்**

*கவிஞர் யுகபாரதியின் பன்முக சிந்தனைகள் என்னும் தலைப்பில் எழுதப்படும் இக் கட்டுரையில் கவிஞர் யுகபாரதியின் பிறப்பு, குடும்பம், சமூக அமைப்பு, அரசியல், காதல் பாடல்கள், தெருவில் கண்ட மாந்தர்கள், திரைப்படப்பாடல்களில் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பன பற்றிய செய்திகள் எடுத்துரைக்கப்படுகிறது.*

## முன்னுரை

ஒவ்வொரு கவிஞர்களும் தான் வாழும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தமது கவிதைகளில் பதிவு செய்து வருகின்றனர். அந்த வகையில் கவிஞர் குடும்பம், சமுதாயம், பெண்கள் காதல், அரசியல், திரைப்படப் பாடல்கள், கவிதைகள், கட்டுரைகள் என பன்முகங்களை உரையவராகத் தனது பதிவுகளில் பன்முக சிந்தனைகளை பதிவு செய்துள்ளனர். கவிஞர் தன் கருத்துக்களை எதார்த்த பூர்வமாக பதிவு செய்வதைக் காணலாம்.

## கவிஞர் யுகபாரதி

தஞ்சை தரணி தந்த கவிஞர்களுள் ஒருவர் யுகபாரதி. பிரேம்குமார் பரமசிவம் என்னும் இயற்பெயரைக் கொண்டவர். 1976இல் தஞ்சையில் பிறந்தவர். ஓர் இதழாளர், எழுத்தாளர், கவிஞர், கட்டுரையாளர், திரையிசைப் பாடலாசிரியர் என பன்முக படைப்பாளராக திகழ்கிறார். பிரேம்குமார் என்ற இயற்பெயரை பாரதியார் மீது ஏற்பட்ட ஈர்ப்பு காரணமாக அவரது கருத்துக்களைப் பதித்துக் கொண்டு இந்த யுகத்திற்கு ஒரு பாரதியாக யுகபாரதி என மாற்றிக் கொண்டவர்.

**குடும்பம்**

ஒவ்வொரு தனி மனிதன் வாழ்வில் மிக முக்கிய பங்கு வகிப்பது குடும்பம் தான். குடும்பத்தைப் புரிந்து கொண்டால் தான் அவன் மன நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழ முடியும். சமூகத்தையும் புரிந்து கொள்ள முடியும்

**வீட்டைப் புரிந்து கொள்வது வீடு**
**உங்களைப் புரிந்து கொள்வதைவிட சிக்கலானது**
**உங்களை அதுவும்**
**அதனை நீங்களும் புரிந்து கொள்வது**
**எளிய காரியமில்லை**

என குடும்ப சூழலை விளக்கியுள்ளார் கவிஞர்.

**சமூக அமைப்பு**

**கையேந்தி பவனிலிருந்து**
**காஸ்ட்லி உணவகம் வரை**
**நல்லதை தீர்மானிப்பது**
**நாக்கு தான்**
**வாக்கு மாறினாலும்**
**நாக்கு மாறுவதில்லை**
**நாக்கை வைத்துத் தான்**
**நடக்கின்றன**
**உணவகமும் அரசியலும்**

என கவிஞர் தனது கவிதைகளில் விளக்குகிறார்.

**அரசியல்**

அரசியல் செய்ய வந்த சுயநல அரசியல்வாதிகள் தேர்தல் திருவிழாவில்,

**குள்ளநரி சிங்கத்தோடு**
**கூட்டணி வைத்துக் கொண்டால்**
**வெள்ளைநிறம் ஊதாவோடு**
**விருப்புடன் சேர்ந்து கொண்டால்**
**உள்ளமதை உணர்ந்து கொள்ளும்**
**கள்ளத்தனமான கொடியை கட்டும்**
**கரன்சிதான் கொள்கை திட்டம்**

இவ்வாறு தான் வெற்றி பெறுகின்றனர் என கவிஞர் கவிதைகளில் கூறுகின்றார்.

**காதல் பாடல்கள்**

சொல்லிய காதலை விட சொல்லாத காதலுக்கே ஆயுள் அதிகம். சொல்லித்தான் ஆக வேண்டும், காதலை சொல்லாமல் போனால் தன்னுடைய காதல் இல்லாமல் போய்விடுமோ என ஏங்குகிறாள் கும்கி திரைப்படத்தில்,

**நீ எப்ப புள்ள**
**சொல்ல போற?**
**தப் பென்ன செஞ்சேன்**
**தள்ளி போற?**
**நீ வெறும் வாய மெள்ளாம**
**ஒரு வார்த்தை சொல்லு - சொல்ல**
**பதிலேதும் இல்லேன்னா**
**அடியோடு கொல்லு**

என காதலை திரைப்படத்தில் பாடல்களில் விளக்குகிறார்.

**தெருவில் கண்ட மாந்தர்கள்**

**பூக்காரி துயரம்**

**ஆலய வாசல் முன்பே**
**அனுதினம் இருந்தாலும்**
**சாமிகள் இவளுடைய**
**சங்கடத்தை**
**தீர்ப்பதில்லை**

பூக்காரித் துயரம் போக்கவில்லையே சாமி என கூறியுள்ளார்.

**கரகாட்டக்காரி வறுமை**

**வெட்ட வெளி மீது**
**வெறியோடு ஆடுகிறாள்**
**பட்ட துயர் தீர**
**பசியோடும் ஆடுகிறாள்**
**ஆடவர் பாத்திருக்க**
**கிடைக்குமா பத்து ரூபாய்**
**கேட்கிறது இவள் ரவிக்கை**

வறுமை காரணமாகத்தான் ஒரு கரகாட்டக்காரி பசியோடு ஆடுகிறாள் என விளக்கியுள்ளார்.

***மீன் காரியின் கண்ணீர்***

***தண்ணீர்***
***முட்டையிடுகிறது மீன்***
***கண்ணீரில்***
***குஞ்சு பொறிக்கிறாள்***

*கண்ணீரில் குஞ்சு பொறிக்கிறாள் மீன்காரி இவள் என மீனையும் மீன்காரியையும் குறிப்பிடுகிறார்.*

***ஐஸ் வண்டிக்காரன்***

***எங்கு வீசுவதென***
***தெரியாமல் திணறும்***
***குழந்தைகளின் விரல்களில்***
***சிம்புக் குச்சிகள***
***இவனது விரல்களில்***
***வாழ்க்கை அல்ல***
***வயிற்றுப் பசி***

*என ஐஸ் வண்டிக்காரன் துன்ப துயரங்களை விளக்கியுள்ளார் கவிஞர்.*

***கவிஞர் யுகபாரதியின் பன்முக சிந்தனைகள்***

*கவிஞர் சமுதாயம் என்ற வட்டத்திற்குள் குடும்பம், காதல், சமூகம், அரசியல், தெருவில் கண்ட மாந்தர்கள் என நகரம், கிராமம் என தான் கண்ட காட்சிகளின் உண்மைத் தன்மையைப் பதிவு செய்துள்ளார். புதுக் கவிதைகள் படைப்பில் குடும்ப உறவுகள் மது, மாது, ஏழ்மை, பொதுவுடைமை, மகளிர் பாடுகள், சமுதாய சீர்த்திருத்த நோக்குடன் அணுகப்படுகிறது. சமுதாயம் என்ற வட்டத்திற்குள் தான் மக்களின் உள் உணர்வுகள் வெளிப்படுத்தப்படும் என சமுதாய மதிப்புகளின் நிலைப்பாடு அணுகப்படுகிறது மூலம் கவிஞரது பன்முகத் தன்மை வெளிப்படுத்தப்படுகிறது.*

***கட்டுரைத் தொகுப்பு***

*கவிஞர் எழுதிய கட்டுரைத் தொகுப்புகள் ஏழு ஆகும். கண்ணாடி முன், நேற்றைய காற்று, ஒன்று, நடுக்கடல், முனிக்கப்பல், வீட்டுக்கு வெளியே, வெவ்வேறு சுவர்கள், அதாவது, நானொருவன் மட்டிலும் இதில் இரு நூல்கள் தமிழ் நாடு அரசின் விருதைப் பெற்றுள்ளது.*

***கவிதைத் தொகுப்புகள்***

***மனப்பத்தாயம்***
***பஞ்சாரம்***
***தெப்பக் கட்டை***
***நொண்டிக் காவடி***
***தெரு வாசகம்***

*கவிதைத் தொகுப்புகள் ஆறு ஆகும். அந்நியர் உள்ளே வரலாம், மனப்பத்தாயம், தமிழ்நாடு மற்றும் திருப்புர் தமிழ் சங்க விருது பெற்றதாகும்.*

***திரைப்படப் பாடல்கள்***

*2000 ஆண்டுகளில் இருந்து இவர் இயற்றிய திரைப்படப் பாடல்கள் 1000 ஆகும். காதல் பாடல் முதல் துயரப் பாடல் வரை அனைத்து தரப்பினரைப் பற்றியுள்ள பாடல்கள் மூலம் இவர் சமுதாயத்தின் மீது எவ்வளவு நோக்கமுடையவராக திகழ்கிறார் என்பதை அறிய முடிகிறது.*

***முடிவுரை***

*கவிஞர் யுகபாரதி வளர்ந்து வருகின்ற கவிஞர்களுள் ஒருவராவர். இவரது படைப்புகள் தனித்தன்மையை புலப்படுத்துவதுடன் கட்டுரை, கவிதை, திரைப்படப் பாடல்கள் இவரது பன்முகத் தன்மையைப் வெளிப்படுத்துகிறது. காலத்தால் அழியாத கருத்தாழம் மிக்க இனிமை வாய்ந்தவை இவருடைய படைப்புகள். தேமதுரத் தமிழிசையாய் எட்டுத் திசையிலும் ஒலித்து பெருமை சேர்க்கவேண்டும். தெருவாசகமாந்தர்களை பார்க்கும் பொழுது திருவாசகம் பக்தி நூல், தெருவாசகம் பசியை தெரிவிக்கும் நூல் என கவிஞர் பதிவு செய்யும் பொழுது இவரது தனித் தன்மையை அறியலாம்.*